# DEPOSITION OF WITNESS
# UNDER CODE OF CRIMINAL PROCEDURE

## IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, DHARMAPURI.

| | | |
|---|---|---|
| **Case No.** | **:** | **CC. No: 141/2025** |
| **Ranking of witness** | **:** | **PW1** |
| **Name** | **:** | **சித்ரா** |
| **Father's Name** | **:** | **க/பெ. முத்துலிங்கம்** |
| **Age** | **:** | **41** |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Religion** | **:** | |
| **Calling** | **:** | |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 15-10-2025.**

**எதிரி நீதிமன்றத்தில் நேரில் முன்னிலையானார்.**

<u>**முதல் விசாரணை:**</u>

நான் BS அக்ரகாரம் கிராமத்தில் குடியிருந்து, விவசாய கூலி வேலை செய்து வருகிறேன். இவ்வழக்கு விபத்தில் இறந்த தனுஷ் என்னுடைய மூத்த மகன் ஆவார். கடந்த 2024ஆம் ஆண்டில் ஒருநாள் எங்கள் ஊரைச் சேர்ந்த முருகன் என்பவர் வீட்டிற்கு வந்து, என்னுடைய மகனுக்கு ஆட்டுக்காரம்பட்டியில் படித்துக் கொண்டிருந்த என்னுடைய இளைய மகனை அழைத்து வருவதற்காக இரு சக்கர வாகனத்தில் சென்றபோது கிருஷ்ணா பேக்கரி அருகில் மற்றொரு இருசக்கர வாகனம் மீது மோதி விபத்து ஏற்பட்டதாகவும், அவரை தருமபுரி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று சிகிச்சையில் சேர்த்திருப்பதாகவும் தகவல் அறிந்து, நான் தருமபுரி அரசு மருத்துவமனைக்கு சென்று பலத்த காயங்களுடன் சிகிச்சையில் இருந்த என் மகனை பார்த்தேன். அப்போது போலீசார் விசாரிக்க, என்னுடைய மகன் பேசமுடியாத நிலையில் இருந்ததால், விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் மீது நடவடிக்கை எடுக்க கோரி நான் புகார் வாக்குமூலம் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் **அ.த.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேல் சிகிச்சைக்காக சேலத்தில் உள்ள தனியார் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றும், முன்னேற்றம் ஏற்படாததால் மீண்டும் தருமபுரி அரசு மருத்துவமனைக்கு என்னுடைய மகனை கொண்டுவந்து, சிகிச்சையில் சேர்த்தபோது, அவர் சிகிச்சை பலனின்றி, விபத்து நடந்து சுமார் 3 நாட்கள் கழித்து, இறந்துவிட்டார். தருமபுரி அரசு மருத்துவமனை சவக்கிடங்கில் நடந்த பிரேத விசாரணையில் உடன் இருந்தேன். இந்த விபத்து குறித்து போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**</u>

விபத்து சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நான் நேரடியாக விபத்தை பார்க்காததால், விபத்து யாருடைய கவனக்குறைவால் ஏற்பட்டது என்று நேரடியாக எனக்கு தெரியாது

என்றால் சரிதான். விபத்தானது இரவு 07.00 – 08.00 மணிக்குள் நடந்தது என்றால் சரிதான். சம்பவத்தின் போது எனது மகனுக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரிதான். விபத்து நடந்த தினத்தன்று எனது மகன் தலைக்கவசம் ஏதும் அணிந்திருக்கவில்லை என்றால் சரியல்ல. அணிந்திருந்தார். நான் கூறுவது போல் தலைக்கவசம் அணிந்திருந்தால் அவருக்கு உயிரிழப்பு ஏற்பட்டு இருக்காது என்றால் சரியல்ல. நான் கையொப்பம் இட்ட அ.த.சா.ஆ.1 புகாரில் என்ன விவரங்கள் எழுதப்பட்டிருந்தது என்றால் சரிதான். ஏனெனில் என் மகன் இறந்த துக்கத்தில் இருந்தேன்.

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை, என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு, என் முன்பு சாட்சி கையொப்பம் செய்தார்.**

**தலைமை குற்றவியல் நடுவர் நீதிபதி,**
**தருமபுரி.**

**சாட்சியின் கையொப்பம்.**